இணைப்பு-1

[255-ம் பக்கத்தில் 300-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

18—12—1971-ல் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மேற்கொண்ட முடிவுகள் பின்வருமாறு :—

1. டிசம்பர் மாதம் 26-ம் நாளை "வங்காள தேச விடுதலை விழா, இந்தியப் பாதுகாப்பு நாளாக" க் கொண்டாடவும். அப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அமைச்சர் பங்கு கொள்வார். பொதுக் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்வதோடு இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுக்கு அழைப்பு அனுப்புதல்.

2. தேசியப் பாதுகாப்பு உதவிக்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சமூக நல அமைப்புகளின் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள், நலப்பணியாளர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப் பினர்களாகவும் கொண்ட குழுக்களை மாவட்ட அளவில் அமைத்தல்.

3. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு சிறப்புப் பரிசுச் சீட்டுகள் விற்பதன் மூலமும், பெரிய தொழிலதிபர்கள், உழவர்கள், வணிகர் களிடமிருந்தும், அவர்களைச் சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடைகள், அன்பளிப்புக்கள் வாங்குவதன் மூலமும் உண்டியல்கள் மூலமாகவும் நிதி திரட்டுதல்.

4. நன்கொடைகளுக்கு ரசீது வழங்கியும், வசூல் செய்த தொகைகளுக்குச் சரியான கணக்கு வைத்துக் கொள்வதில் கண்டிப்பான நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் வலி யுறுத்துதல்.

5. மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழுக்களின் உறுப் பினர்கள், இராணுவ வீரர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும், உதவிகளையும் நல்குதல்.

[1972 ஆகஸ்ட் 24

6. தேசியப் பாதுகாப்பு தொடர்பான பணியைக் கவனித்துக் கொள்ள ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் கூடுதலான ஓர் உதவியாளரை நியமிக்க அனுமதி வழங்குதல்.

7. இன்றியமையாப் பொருள்களைப் பதுக்குவது, பொருள் களின் விலையேற்றம் முதலியவற்றைத் தடுத்தல், சர்க்கரை பகிர்ந் தளிப்பதற்காக அட்டைகளை வழங்குதல்.

Decisions taken at the Collector's Conference held on 18th December 1971.

1. To celebrate the 26th December as "வங்காள தேச விடுதலை விழா இந்தியப் பாதுகாப்பு நாள் and to organise public meetings, processions by the Collectors with one Minister participating in the functions in each district and inviting representatives of the Political Parties to take part in the district functions.

2. To constitute District Level Committees for National Defence Aid with Collector as Chairman and M.Ps., M.L.As., M.L.Cs. and also select Panchayat Union Chairman, select representatives of Social Welfare Organisations, Welfare workers, Industrialists, businessmen and representatives of political parties as members.

3. To raise National Defence Fund by sale of special raffles and by Collection of donation and contribution from affluent industrialists, farmers, businessmen, Commercial men and related organisations and also through hundis.

4. To issue receipts for donations and to ensure strict observance of procedure in the collection of amounts and accounting.

5. To provide amenities to the families of the Jawans by the members of the District Committee by meeting families of Jawans offering them solace and rendering such assistance as may be required.

6. To sanction additional staff of one Assistant in each collectorate to attend to items of work concerning National Defence and

7. To guard against possible hoarding and hiking of prices of essential articles, to issue ration cards for distribution of sugar.